**முனைவர் தே.தேன்மொழி**
**உதவிப்பேராசிரியர்**
**வேல்ஸ் பல்கலைக்கழகம்**
**சென்னை-117**
**செல்: 8610928727**

# மரணமில்லா பெருவாழ்வில் வள்ளலாரும் வள்ளுவரும்

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்க்கை நிலையற்றது; மாயையில் மூழ்கிய மனிதன் உலக இன்பங்களை மெய்யெனக் கருதுகின்றான். இதனைத் தாண்டி, வள்ளலார் “ஒளியுடம்பு” மற்றும் “சாகாக்கல்வி” மூலம் மரணத்தைத் தாண்டிய நிலையை முன்வைக்கிறார். மறுபுறம், திருக்குறள் அறநெறி வழியாக “பிறவி நீக்கம்” எனும் ஆன்மிக இலக்கை வலியுறுத்துகிறது. இவ்விரு சிந்தனைகளும் மனிதனைப் பற்றின்மை, இறைஅன்பு, ஞானநிலை ஆகியவற்றின் மூலம் பிறப்பு–மரணம் சுழற்சியிலிருந்து விடுவிக்கின்றன. ஆகவே, “இறைஅன்பில் நிலைபெற்ற வாழ்வே மரணமிலாப் பெருவாழ்வு” என்பது இவ்வாய்வின் மையக் கருத்தாகும். வள்ளலார் மற்றும் திருவள்ளுவர் ஆகிய இரு மகான்களின் ஆன்மிகச் சிந்தனைகளில் “மரணமிலாப் பெருவாழ்வு” என்ற கருத்து எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை ஆராய்கிறது.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய மரபு ஆன்மிகம், அறம், மனிதநேயம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடாக விளங்குகிறது. இம்மரபில் வள்ளலார் மற்றும் திருவள்ளுவர் ஆகியோர் மனித வாழ்வின் உச்ச இலக்கை வேறுபட்ட கோணங்களில் விளக்கியுள்ளனர். வள்ளலார் தனது திருவருட்பா வழியாக, மனிதன் இறைஅன்பின் மூலம் மரணத்தை வென்று “ஒளியுடம்பு” அடைந்து இறைவனோடு ஒன்றிணையலாம் என்கிறார். அவர் வலியுறுத்தும் “மரணமிலாப் பெருவாழ்வு” என்பது உடல் அழிவைத் தாண்டிய பரம ஆன்மிக நிலையாகும். மறுபுறம், திருவள்ளுவர் திருக்குறள் நூலில் அறநெறி, பற்றின்மை, இறைநிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு “பிறவி நீக்கம்” எனும் விடுதலையை முன்வைக்கிறார். மனிதன் பிறப்பு–மரணம் எனும் சுழற்சியில் சிக்கியிருப்பதன் காரணம் அவன் பற்றுகளும் வினைகளுமாகும்; அவற்றை நீக்கினாலே விடுதலை கிடைக்கும் என்பது இருவரின் பொதுக் கருத்தாகும். இவ்வாய்வு, இவ்விரு மகான்களின் சிந்தனைகளையும் ஒப்பிட்டு, மனித வாழ்க்கையின் இறுதி நோக்கம் என்ன என்பதை ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

**வள்ளலாரின் ஞானதானம்**

விழிகளின் மேலாண்மையை எல்லோருக்கும் உணர்த்தியவர் வள்ளலார். உலக மக்கள் அனைவரும் மரணமில்லா பெரு வாழ்வு பெற வேண்டும் என்பதற்காக மிகவும் அரிதான “சாகாக்கல்வி” எனும் பிறப்பறுக்கும் ஞான கல்வியை உலகோருக்கு தெரிவித்தார்., ஞான இரகசியங்களை எல்லோரும் அறிய திருவருட்பாவில் வெளிப்படுத்தி னார். பாமரரும் புரிந்து –

தெளிந்து உணரும் படியாக வடலூரில் சத்திய ஞான சபையைக் கட்டி , உலகில் வேறு எங்கும் இல்லாதபடி , இறைவனை, கருணையே வடிவான பெரும்ஜோதியை எல்லோரும் கண்டு களிக்கும்படி , 7 திரை நீக்கிக் காட்டியருளினார்.

எல்லா ஜீவராசிகளைப் போலவே மனிதனும் பிறக்கிறான். வளர்கிறான். படிக்கிறான். பொருள் ஈட்டுகிறான். திருமணம் செய்து கொள்ளுகிறான். பிள்ளை பெறுகிறான். முடிவில் உடலை கீழே விட்டுவிட்டு செத்துப் போகிறான். சில அசாதாரண மான மனிதர்கள், சித்தர்கள் செத்துப் போகாமல் ஜீவனை தன்னுள் ஒடுக்கி சமாதியாகிவிடுகிறார்கள். இன்னும் சில அசாதாரணமான தவசீலர்கள் தங்கள் தவவலிமையால் பஞ்சபூதத்தால் ஆன உடலை பஞ்சபூதத்தில் ஆன ஏதாவதொன்றில் மாற்றிக் கொள்கிறார்கள். இவை எல்லாவற்றையும் தாண்டிய நிலையே உடலையே ஒளியாக்குவது. உடலை கீழே விடாமல் ஒளியாகிய பேரொளியில் கரைந்து போவது.

ஒளி உடம்படைந்த ஒருவரின் உடலில் மண் பூதமே இருக்காது. அந்த உடலில் நெருப்பால் எரிக்க ஏதும் இருக்காது. எனவே ஒளி உடம்படைந்த ஒருவரின் உடலை அழிப்பதென்பது இயலாத காரியம். அப்படி ஒளி உடம்பு எடுத்து இறைவனோடு ஐக்கியமானவர்கள் பலர். அவர்களில் நந்தனார், பத்திரகிரியார், கருவூரார், மணிவாசகர், ஆண்டாள், திருஞான சம்பந்தர் ஆகியோர். 1874ல் வடலூர் மேட்டுக்குப்பத்தில் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கசுவாமிகள் ஒளியாகி அருட்பெரும் ஜோதி ஆண்டவருடன் இரண்டறக் கலந்தார். உலகம் உய்ய, மனிதன் மரணமில்லா பெருவாழ்வு பெற வடலூர் வள்ளல் பெருமான் வழிகாட்டுகிறார்.

**சாகாக்கல்வி**

சாகாக்கல்வி – சாகாத நிலை பெற்றவர்கள் உபதேசித்தது. மனிதன் சாகாமல் இருக்கமுடியுமா என்றால் முடியும் என்கிறார்கள் அவர்கள். எல்லா சராசரி மனிதர்களும் சாகாமல் இருக்க முடியும் என்கிறார்கள் சித்தர்கள். சாகாமல் இருப்பது எப்படி என்ற ரகசியம் காலங்காலமாக மறைத்து வைக்கப்பட்டு விட்டது. அந்த ஞானத்தை, ரகசியத்தை பல சித்தர்கள் மறை பொருளாக சொல்லி வைத்தார்களே தவிர சராசரி மனிதன் புரிந்து கொள்ளும்படி ஏனோ அவர்கள் வெளிப்படுத்தவில்லை. வள்ளலார் அவர்களே அந்த ரகசியத்தை எல்லா மனிதர்களும் எளிமையாக புரிந்து கொள்ளும் வண்ணம் தந்து திருவருட்பாவில் வெளிப்படுத்தி அருளினார்கள். வழிகாட்டியதோடு மட்டுமல்லாமல், வாழ்ந்தும் காட்டி, ஒளியுடல் பெற்று இறையோடு கலந்து நமக்கு கண் முன்னே ஒரு உதாரண புருஷனாக ஒளியுடலோடு வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்.

**மரணமிலாப் பெருவாழ்வு**

இந்த உலகம் ஐந்து பூதங்களால் ஆனது போன்றே மனித உடலும் ஐந்து புலன்களைத் தன்னகத்தே கொண்டது. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி, என்றும் இதனால் பெறும் பலனை சுவை, ஒளி , ஊறு, ஓசை, நாற்றம் என்றும் கூறுவர். இவைகள் வரம்பு மீறிச்

செல்கின்ற போது தன் வயமிழந்து படைத்தானையும் நினையாது என்று சிவஞான போதம் எட்டாஞ் சூத்திரம் விளக்குகிறது.

**“ஐம்புல வேடரின் அயர்ந்தனை**

**வளர்ந்து என்தம் முதல் குருவுமாய்த்**

**தவத்தினில் உணர்ந்த விட்டு அந்நியம்**

**இன்மையின் அரன் சூழல் செலுமே**” (சென்னியப்பனார் (உ.ஆ) சிவஞான போதம் சூத்.8)

இதனை,வள்ளுவர் கூறும் போது நிலத்திற்கு ஏற்ப நீரின் சுவை மாறுபடுவது போல் இனத்திற்கு ஏற்ப மனித அறிவும் நிலை பெயரும் என்கிறார்.

**“நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு**

**இணத்தியல்ப தாகும் அறிவு**” ( திருக்குறள்.452)

இந்த மாறும் அறிவை மாற்றக்கூடிய வல்லமை இறைவனுக்கு மட்டுமே உண்டு. அவ்விறையைப் பசு, பாசத்தை ஒழிக்கும் போது கண்டு இன்பம் பெறும் இந்த இன்பமே இறவாத இன்பமாகும்.

மனிதன் குழவிப்பருவம் முதல் கிழப்பருவம் வரை பல்வகை இன்பங்களை அனுபவிக்கின்றான். அந்த மகிழ்ச்சி ஒவ்வொரு நிலையிலும் மாறுபடுகிறது. இறுதி நிலையில் அவன் வேண்டுவது பற்றுக்களைத் தவிர்க்க இறைவனை நோக்கிய தவநிலை. இதனைத் தொல்காப்பியம்,

“**காமஞ்சான்ற கடைக்கோற் காலை**

**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**

**அறம்புரி சுற்றமொடு கிழவனுக் கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்த தன் பயனே**” (தொல்காப்பியம், கா.கற்பியல்.நூ.51)

என்ற வரிகள் அடியிற்கண்டவாறு உணர்த்தும். பற்றற்றவனின் பற்றைப் பெறவேண்டும் எனும் நிலையில் இறைவனையே நினைத்து உருகுகின்றான். வள்ளலாரின் இந்த நிலையே பெருவாழ்வு என்று சுட்டுகிறார்.

**“நினைந்து நினைந்து தூற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு**

**நனைந்து நனைந் தளேமுதே நன்னிதியே ஞான**

**நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று**

**வனைந்து வனைந் தேத்து நாம் நும்மின் உலகியலீர்**

**மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்”** (திருவருட்பிரகாச வள்ளலார், திருவருட்பா, பாடல். எண்:5576)

என்று நினைந்தும் நெகிழ்ந்தும் நினைந்தும் வனைந்தும் போற்றின் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறலாம் என்கிறார்.

எப்பொருளைக் காண்கினும் பற்று விட்டு எல்லாம் இறையே என்று காண்கின்றது மனம். ஓடும் பொன்னும் ஒன்றே என்று நினக்கிறது. வீடுபேற்றின் மேல் இன்பம் கொள்வதும்

அவாவே எனவே, அதுவும் வேண்டா என்கிறார். இதுவே மரணமிலாப் பெருவாழ்வு என்பது வள்ளலாரின் கருத்துமாகும், வள்ளலார் இதனைக் குறிப்பிடும் போது,

"**புகுந்தருணம் இது கண்டீர் நம்மவரே நான்தான்**
**புகல்கின்றேன் என்மொழி ஓர் பொய்மொழி என்னாதீர்**
**வருந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்**
**உடமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றோ**" (திருவருட்பிரகாச வள்ளலார், திருவருட்பா, பாடல். எண்:5577) என்கிறார். ஆகவே கடவுளையே நினைத்து அவனருளால் அவன்தாள் வணங்கிப் பெறும் இன்பமே மரணமிலாப் பெருவாழ்வு என்றும் மரணம் என்பதே அதற்கில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

"உடமைகள், உறவுகள், உலகியல்" அனைத்தும் நிலையற்றவை; இறுதியில் கடவுளின் அருளே நிலையான துணை என வலியுறுத்தப்படுகிறது. இதைத் தழுவி "மரணமிலாப் பெருவாழ்வு" என்ற கருத்தை விளக்குகிறார். இதனை திருவள்ளுவர், **பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு**" (குறள் 349) உலகப் பற்றுகள் அனைத்தும் நிலையற்றவை , அவற்றை விடுவிக்க வேண்டுமெனில் "பற்றற்றவன்" (இறைவன்) மீது பற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். மேலும்,

"**அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்**
**அற்றாக அற்றது இலர்**" (குறள் 365)

ஆசை இல்லாதவரே உண்மையில் "அற்றவர்",மற்றவர்கள் எல்லாம் இன்னும் பற்றுடன் இருப்பவர்கள் என்பது வள்ளலார் கூறும் "உடமைகளும் உலகியலும் துணையில்லை" என்ற கருத்திற்கு வலுசேர்க்கிறது.

**"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது" (குறள்** 7)

இறைவனை அடைந்தவர்களுக்கே மன அமைதி கிடைக்கும். மற்றவர்களுக்கு கவலை நீங்காது என்பது வள்ளலாரின் "அவன்தாள் வணங்கிப் பெறும் இன்பமே" என்ற கருத்தை உறுதிப்படுத்துகிறது.

**இறவாத இறை அன்பு**

பன்னிரு திருமுறை கண்டோரும் நாயன்மார்களும் பன்னிரு ஆழ்வார்களும் அதனையன்றி சாத்திரஞ் செய்தோரும் வள்ளலார் போன்றோர் பெற்ற இன்பமும் இறவாத அன்புதான். இறவாத "மரணமில்லாத இந்த இரு சொற்களின் பொருளும் ஒன்றே. வள்ளலார் இறை இன்பம் கண்டவர். அதனைத் தான் மட்டுமே கண்டு பயன்கொள்வது போதாது உலக மக்கள் அனைவரும் காணவேண்டும் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது வள்ளலார் எண்ணம். எனவேதான், உலகத்து மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து இறையை இவ்வாறு அழைத்து பயன் பெறுங்கள் என்கிறார்.

**உலகத்து மக்களே! பல காலம் பணிந்து மன அலைவு இன்றி மிகவும் தனிவுற்றுப் பரமசிவனைப் பாடுவீர்களாக! பரம்பரமே சிதம்பரமே! சுவைக் கரும்பே! செம்பொருளே! செங்கனியே! விலையிலா மெய்ப்பொருளே! தயாநிதியே கதியே! வரமே! துணிற்து வந்த வேதாந்த சுத்த அனுபவமே! சமரச சன்மார்க்கச் சத்தியமே! இயற்கையுண்மைத் தனிப்பதியே** என்றெல்லாம் கூறி இறைவனைக் கிளைக்கில் அவன் காண முடியாத காட்சிகள் அனைத்தையும் நமக்குத் தருவான்.

இதனை வள்ளலார் கூறும் போதும் இதுவரை மாயையில் விடுத்து "மெய்ந்நெறிக் கடைபிடித்து மெய்பொருள் நன்குணர்ந்தே எண்டகு சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைமின் இறவாத வரம் பெறலாம் இன்பமுறலாமே" (11) என்று மரணமில்லாமை, இறவாமை எனும் சொல்லாட்சியைக் கையாள்கிறார். இறைவனைப் பற்றிய அன்பு மரணத்தைத் தாண்டும். அது அனைவருக்கும் கிடைக்க வேண்டிய பொதுஇன்பம். இதனை, இறை அடைதல் → மன அமைதி, நிலையான இன்பம், எனவே இறைவனுடன் இணைந்த நிலைதான் நிலையான வாழ்வு என்று குறிப்பிடுகிறார். தாம் பெற்ற ஆனந்தத்தை உலகம் பெற வேண்டும் இறைஅன்பு தனிப்பட்ட அனுபவமாக இருக்கக் கூடாது,என்பதற்கு

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு" (குறள்** 72)

என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். வள்ளலார் வலியுறுத்தும் "இறவாத இறை அன்பு" என்பது சாதாரண பக்தி அல்ல. அனுபவமாக உணரப்படும் பரம்பொருள் நிலை. அதேபோல் திருவள்ளுவர் கூறுவது, இறைவனை அடைந்தாலே பிறப்பு–மரணம், துன்பம், அறியாமை அனைத்தும் நீங்கும். எனவே,"இறைஅன்பில் நிலைபெற்ற வாழ்வே இறவாத பெருவாழ்வு" என்ற இருவரின் சிந்தனையும் ஒன்றே என்பதை அறியமுடிகிறது.

**சிவநெறி**

உலகத்து மக்களே, உண்ணவும் உறங்கவும் உமக்குத் தெரியும் இதில் உறக்கம் - இறப்பு, விழிப்பு, பிறப்பு என்பதை அறியவில்லை. உலகக் காட்சிகள் அனைத்தையும் நீங்கள் ஒருங்கே காண வேண்டும் என்று நினைத்தால் சிவநெறியைக் கடைபிடித்தால் நன்மை உண்டு, மரணபயம் போக்கும் தன்மையும், மரணத்தைத் தடுக்கும் சக்தியும் சிவநெறிக்கே உண்டு. இதனையே வள்ளலார் இன்னும் ஒருபடி மேல் சென்று கூறும் போது மரணத்தைத் தடுக்கும் சக்தி, ஞானசபை என்கிறார்.

**"ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும உணர்நீர்**
**உலகம் எலாம் கண்டிடும் ஓர் உளவை அறிந்திலிரே**
**வார்ந்தகடல் உலகறிய மரணம் உண்டோ அந்தே**
**மரணம் என்றால் சடம் எனும் ஓர் திரணமும் சம்மதியா**
**சார்ந்திடும் அம் மரணத்தைத் தடுத்திடலாம் கண்டீர்**
**தனித்திரு சிற் சபை நடத்தைத் தரிசஞனஞ் செய்வீரே" (17)**

எனும் வரிகள் அழியா ஆற்றல் உள்ளமையைக் காட்டுகின்றன. இத்தகு நிலையைத் திருவள்ளுவர்,

**உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு" (குறள் 339)**

என்ற குறளில் வாழ்க்கைச் சுழற்சியை, விளக்குகிறார். மேலும், உலக நிலையின்மை, உடல் நிலையின்மையை,

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்தது இவ்வுலகு" (குறள் 336)**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. சிவநெறி கடைபிடித்தால் மரணத்தைத் தாண்டும் நிலை பெறலாம் என்பதை,

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்" (குறள் 10)** என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**வள்ளலாரின் மரணமில்லா பெருவாழ்வு**

**நானே தவம் புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்**
**நானே அருட்சித்தி நாடடைந்தேன் - நானே**
**அழியா வடிவம் அவை மூன்றும் பெற்றேன்**
**இழியாமல் ஆடுகின்றேன் இங்கு (5513)**

**ஆடுகின்ற சேவடிக்கே அளானேன் மாளாத யாக்கை பெற்றேன்**
**கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிருந்து குலாவுகின்றேன்**
**பாடுகின்றேன் எந்தை பிரான் பதப்புகழைப் பாடிப்பாடி**
**நீடுகின்றேன் இன்பக் கூத்தாடுகின்றேன் எண்ணமெலாம் நிரம்பினேனே (56)**

இந்தப் பாடலாலும், இவை போன்ற பல பாடல்களும் அவர் பெற்ற மரணமிலாப் பெருவாழ்வைப் பறை சாற்றுகின்றன. தான் ஒளி உடம்பு பெற்றதை அறிவிக்கின்றார்,

**கற்றேன் சிற்றம் பலக்கல்வியைக் கற்றுக் கருணை நெறி**
**உற்றேன் எக்காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்**
**பெற்றேன் உயர்நிலை பெற்றேன் உலகில் பிற நிலையைப்**
**பற்றேன் சிவானந்தப் பற்றே என் பற்றெனப் பற்றினனே (4745)**
**ஆடுகின்ற சேவடிக்கே ஆளானேன் மாளாத ஆக்கை பெற்றேன் என்றும்,**

**காற்றாலே, புவியாலே, ககனமதனாலே,**
**கனலாலே, புனலாலே, கதிராதியாலே,**
**கூற்றாலே, பிணியாலே, கொலைக் கருவியாலே,**
**கோளாலே, பிறவியற்றுங் கொடுஞ்செயல்களாலே,**

**வேற்றாலே, எஞ்ஞான்றும் அழியாத விளங்கும்**

**மெய்யளிக்க வேண்டும் என்றேன் விரைந்தளித்தான் எனக்கே** என்றும்

**வாழி என் தோழி யென் வார்த்தை கேளென்றும்**

**மரணமில்லாப் பெரு வரம் யான் பெற்றுக் கொண்டேன்**

என்றும், இப்படிப் பலப்பல பாடல்களிலே தான் பெற்ற மரணமிலாப் பெருவழ்வைப் பறை சாற்றுகின்றார். “வம்மின் உலகியலீர் மரணமிலா பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்” என்கிறார் வள்ளலார். “மனந்தளராமல் இடைவிடாது முயற்சி செய்கிறவர்கள் ஊழ்வினை களையும் வென்றுவிட முடியும்” என்கிறார் திருவள்ளுவர். “தவம் செய்பவருக்கு அவமாகிய வினைத்துன்பம் ஒருநாளும் வராது” என்கிறார் ஔவையார்.

**முடிவுரை**

வள்ளலார் மற்றும் திருவள்ளுவர் ஆகியோரின் சிந்தனைகள் வெளிப்படையாக வேறுபட்டாலும், அவற்றின் அடிப்படை நோக்கம் ஒரே ஆன்மிக உண்மையை நோக்குகிறது. வள்ளலார் இறைஅன்பு, கருணை, சாகாக்கல்வி ஆகியவற்றின் மூலம் உடலை ஒளியாக்கி மரணத்தைத் தாண்டும் நிலையை வலியுறுத்துகிறார். திருவள்ளுவர் அறநெறி, பற்றின்மை, இறைவன் அடைதல் ஆகியவற்றின் மூலம் பிறவி சுழற்சியிலிருந்து விடுபடும் நிலையை எடுத்துரைக்கிறார். இருவரின் கருத்துகளிலும் உலகியல் நிலையின்மை, இறைநிலை அடைதலின் அவசியம், மற்றும் ஆன்மிக விடுதலை ஆகியவை மையமாக அமைகின்றன. வள்ளலார் கூறும் “மரணமிலாப் பெருவாழ்வு” மற்றும் திருவள்ளுவர் கூறும் “பிறவி நீக்கம்” ஆகியவை இரண்டு வேறு வழிகளாக இருந்தாலும், இரண்டும் ஒரே இறை உண்மையை அடையும் பாதைகளாகும். ஆகவே, இறைஅன்பு, அறநெறி, பற்றின்மை ஆகியவற்றை ஒருங்கிணைத்த வாழ்வே மனிதனை பிறப்பு–மரணம் கடந்த நிரந்தர ஆன்மிக இன்ப நிலைக்கு கொண்டு செல்லும் என்பதே இக்கட்டுரையின் நிறைவு கருத்தாகும்.

**துணைநின்ற நூல்கள்**


1. திருவருட்பிரகாச வள்ளலார், திருவருட்பா, திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர் - 607 303.
2. சேக்கிழார். (2004). பெரியபுராணம். சென்னை: உமா பதிப்பகம்.
3. திருஞான சம்பந்தர். (2005). தேவாரம். சென்னை: உமா பதிப்பகம்.
4. வரதராசனார், மு. (உ.ஆ.). (2012). திருக்குறள். சென்னை: பாரிநிலையம்.
5. ராஜ்கௌதமன். (2011). கண்மூடி பழக்கமெல்லாம் மண்மூடி போக. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.